**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.45/2024**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா, அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விநாயகம் | மதம் | : இந்து |
| த/பெ | : கிருஷ்ணா ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 66 | கிராமம் | : தரணிவராகபுரம் |
| தொழில் | : ஓய்வு | வட்டம் | : திருத்தணி |

**13.08.2026**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

2. 29.11.1985ம் தேதியிட்டு கலில் எனக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 12.05.1995ம் தேதியிட்டு வாணி வகையறா சேகர் வகையறாவுக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான வில்லங்க சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 06.02.2024ம் தேதியிட்டு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். **(வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் (12 எண்ணம்) மற்றும் அஞ்சல் ரசீதுகள் (13 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். **(அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் மற்றும் அஞ்சல் ரசீதுகள் வா.சா.ஆ 5 வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் (11 எண்ணம்) மற்றும் அஞ்சல் உறை தாக்கல் செய்கிறேன். **(அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் (11 எண்ணம்) மற்றும்**

**அஞ்சல் உறை வா.சா.ஆ 6 வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 14.08.2023ம் தேதியிட்ட திருவள்ளூர் மாவட்ட பதிவாளரின் உத்தரவு தாக்கல் செய்கிறேன். **(உத்தரவு வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 17.10.2023ம் தேதியிட்டு திருவள்ளூர் காவல் கண்காணிப்பாளரிடம் நான் கொடுத்த புகார் மனு கைநகல் தாக்கல் செய்கிறேன். **(புகார் மனு வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 20.10.2023ம் தேதியிட்டு திருவள்ளூர் மாவட்ட குற்ற பிரிவு காவல் உதவி ஆய்வாளர் அனுப்பிய அழைப்பாணை தாக்கல் செய்கிறேன். **(அழைப்பாணை வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.69ல் என் பெயரில் உள்ள பட்டா தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான 1435க்கான அடங்கல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(அடங்கல் வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)